செய்தி வெளியீடு எண். 56-2016                                   நாள்: 25.11.2016

**விழுப்புரம் மாவட்டம் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் ஆதார் அட்டை இல்லாவதர்களுக்கு ஆதார் அட்டை வழங்குதல் மற்றும் வங்கிக் கணக்கு இல்லாதவர்களுக்கு வங்கிக் கணக்கு துவங்குதல் ஆகியவற்றிற்கான முகாம் 28.11.2016 முதல் 03.12.2016 வரை நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

****

ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் வங்கி கணக்கு வைத்திருப்பவர்கள் அக்கணக்கு எண்ணுடன் ஆதார் எண்ணை இணைத்தல், ஆதார் அட்டை இல்லாதவர்களுக்கு ஆதார் அட்டை வழங்குதல் மற்றும் வங்கி கணக்கு இல்லாதவர்களுக்கு வங்கி கணக்கு துவங்குதல் ஆகியவற்றிற்கான முகாம் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் 28.11.2016 முதல் 03.12.2016 வரை நடைபெறவுள்ளது. எனவே, ஆதார் அட்டை பெறுதல் மற்றும் வங்கி கணக்கு துவங்க தேவையான முன்னேற்பாடுகள் அந்தந்த ஊராட்சிகளில் ஊராட்சி செயலர், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நிர்வாகிகள், கிராம வறுமை ஒழிப்பு சங்க நிர்வாகிகள், களப்பகுதி வழிநடத்துநர்கள், கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலக பணியாளர்கள் மேற்கொள்ளவுள்ளார்கள். பேரூராட்சி பகுதிகளில் செயல் அலுவலர், நகராட்சி பகுதிகளில் ஆணையர் மற்றும் நகராட்சி பணியாளர்கள் பணிமேற்கொள்ள உள்ளனர். இம்முகாமினை அனைவரும் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.